# கல்லூரிப் பாடல்

**பல்லவி**

ஜய ஜய போற்றி ஜய ஜய போற்றி எம்
ஜி வி ஜி விசாலாட்சி கல்லூரி போற்றி

**சரணங்கள்**

1. உடுமலை உயர்ந்திட வாழ்ந்திட்ட உத்தமர்
விடுதலை உணர்வினில் விஞ்சிய வித்தகர்
வடதிரு வேங்கடன் இணையடி தொழுதவர்
நெடுநிலைக் கம்பனின் நெறிதனைக் கண்டவர்

(ஜய ஜய)

2. பெண்ணியல் தீபமாய்மகளிர் பொலிந்திடப்
புண்ணிய கோவிந்த சாமி நிறுவிய
கண்ணினும் இனியநம் கல்லூரிதன் புகழ்
விண்ணினும் உயர்ந்திட வீறுடன் உழைப்போம்

(ஜய ஜய)

3. வெள்ளத் தனையது வெண்மலர் நீட்டம்
உள்ளத்தனையது உயர்வென உணர்ந்தோம்
கள்ளத் தனம் நிறை தன்னலம் தவிர்ப்போம்
துள்ளி அனைவரது துங்கம் உயர்த்துவோம்

(ஜய ஜய)

4. நந்தா விளக்கமாம் நாயகன் திருவருள்
தந்திடத் தரணியில் தவறுகள் களைவோம்
சந்ததம் நன்மைகள் சேர்ந்தே இணைந்தே
வந்தனை புரிநல் அன்னமாய்வாழ்வோம்

(ஜய ஜய)

5. தேச பக்தியெனும் வாழ்வின் பசுமையை
ஈசன் பக்திச் சுடர் செம்மையில் பிணைப்போம்
தேசமும் தெய்வமும் நெஞ்சில் நிலைத்திட
ஆசைக் கல்வியால் அறநிலை காப்போம்

(ஜய ஜய)

– **முனைவர். ஏ.ஆர். இந்திரா**
முதல்வர், தமிழ்த்துறைத்தலைவர் (1979–1985)

Scanned by CamScanner